## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.

## அசல் வழக்கு எண்.178/2017

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியாகிய இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. வெ. பார்கவி B.A.,B.L.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 22.03.2022 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | விஜயலெட்சுமி (PW-1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | சமயம்: | |
| சாதி: | | வயது : | |
| தொழில்: | | | |

**<u>முதல் விசாரணை: 22.03.2022</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

28.10.1996 தேதியிட்ட எனது சகோதரர் ரவிச்சந்திரன் கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.12.2015 தேதியிட்ட எனது தந்தை சுந்தரமூர்த்தி 2ம் பிரதிவாதி

சிங்காரேவேலுவிற்கு எழுதிவைத்த பதிவு செய்யப்பட்ட உயில் பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன்.(இந்த ஆவணம் பிரதிவாதிகள் தரப்பில் உயிலின் அசலை தாக்கல் செய்யவில்லை என்று ஆட்சேபணை தொிவிக்கப்ட்டது.) மேற்படி ஆட்சேபணையுடன் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 03.12.2016 தேதியிட்ட நான் எனது வழக்கறிஞா் மூலம் 2 ம்வாதிக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் அனுப்பிய வழக்கறிஞா் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 09.12.2016 தேதியிட்ட மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்பை முதல் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல்அட்டையின் அசலை தாக்கல்செய்கிறேன். அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்பை இரண்டாம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியதற்கான அஞ்சலக உறையை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 9.12.2016 தேதியிட்ட மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்பை 3 ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல்செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 9.12.2016 தேதியிட்ட மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்பை இரண்டாம் வாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல்அட்டையின் அசலை தாக்கல்செய்கிறேன். அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.3 அறிவிப்பை 4 ம்பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிய அஞ்சலக உறையை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 15.12.2016 தேதியிட்ட பிரதிவாதிகள்

அவா்களது வழக்கறிஞா்மூலம் என் சாா்பாக எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அஞ்சலக உறையுடன்கூடிய சாா்வு நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடா்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.